REGD. No. 3712.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# வகுளமாலை.

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை.

"கண்ணன் கழலிணை
நண்ணும் மனமுடையீர்!
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே" — வகுளாபரணர்.

"அகரமுதல வெழுத்தெல்லாமாதி
பகவன் முதற்றே யுலகு"
"தனக்குவமை யில்லாதான்றாள் சேர்ந்தார்க்கல்லால்
மனக்கவலை மாற்றலரிது" — திருவள்ளுவர்.

"உலகம் யாவையுந் தாமுளவாக்கலும்
நிலைபெறுத்தலு நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையாரவர்
தலைவரன்னவர்க்கே சரணங்களே" — கம்பர்.


தொகுதி 1. } ஈசுவர ௵ மார்கழி ௴ { பகுதி 12.
Vol. 1. } JANUARY 1938. { No. 12.


உள்ளுறை.


| | | | |
|---|---|---|---|
| 1. | வருணப்பான்மை. | பத்திராசிரியர். | 186. |
| 2. | குருபரம்பரை. | ஷை | 195. |
| 3. | திருவாய்மொழி அநுபவம். | ஸ்ரீ உ. வே. ஏ. வி. கோபாலாசாரியார். | 198. |



பத்திராசிரியர் :—
ஆர். கேசவய்யங்கார், M.A.B.L., அட்வொகேட்.

வருஷம் 1-க்கு ரூ. ஒன்று] [தனிப்பிரதி அணா ஒன்றரை

# சௌத் இண்டியன் ஸ்டோர்ஸ்,

## திருவல்லிக்கேணி.

---

நேர்த்தியான மளிகை சாமான் நேராகத் தருவித்து செட்டு ரெம்பக்கம்மியாக்கி சீக்கிரத்தில் கொடுக்கிறோம். நேரிலே மின்சாரத்தில் வறுத்தரைத்த காப்பியும், கடைந்தெடுத்த கட்டியான வெண்ணையும் நறுமணத்த புத்துறுக்கு மேன்மையான நெய்யும், குழையாத பழவரிசி வியன்மிக்க வழுதாகும், சீக்கிரத்தில் மாவு போல் குழைந்து போகும் ருசியான பருப்பும், பார்த்தவரும் கேட்டவரும் பரிவுடனே வாங்கிடுவார். மிக்க புகழ் பெயர் பெற்ற பரிமளப் பாக்கு சீராக வுடைத்து உயர்ந்த நல்ல வாசனைச் சரக்கு நெய் யுடனே சேர்த்து வேண்டு மட்டும் விற்கிறோம். இக்கடையில் இடைவிடாது வாங்குவோர்க்கு இக்கட்டே இருக்காது. மிக்க பல முண்டாகும். நிரப்ப அறிவும் ஊறும்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# வகுளமாலை.

தொகுதி 1. Vol. 1. | ஈசுவர ௵ மார்கழி ௴ JANUARY 1938. | பகுதி 12. No. 12.

## வருணப்பான்மை.

இவ்வுலகிலின் னுயிர்களிவ்வுடனடப்பச்
செவ்விநெறிசிந்துமொரு சிந்தையனெனத்தான்
விவ்விகுதிதொக்குநிலையொக்க விளையாடும்
செவ்வியனகத்திருசகத்துற வகுத்தான். (1)

கடுங்கன்மர் காமக்கடன்பட்டிறப்பே
படுங்காலமெல்லாம் நடுங்காதுபோந்தே
அடங்காதவாதப்படங்கொண்டு பாம்பாய்
விடங்கக்கிமாளக்கிடந்தாடுவாரே. (2)

கரைக்கார்முகிற்கால கண்ணன்மறைக்காம்
சுரைக்காயகைப் பென்றுரைப்பாருவக்கும்
சிரக்கோப்புதோறும் சிரிப்போங்கவாங்கே
சரக்கோப்புதைக்கச்சிதைப்பான் சிரங்கள். (3)

சுமக்கும் பரன் பொற்பதத்தே சமைக்கும்
நமக்கென்ன வொண்ணு நமக்கார நண்ணத்
தமக்காம் பரங்கொண்டு தாங்காக்கு மெண்ணத்
தமைக்கும் பிராணாறச் செவ்வி சொல்வாம். (4)

ஸர்வசேதநாசேதந சரீரகனான பரம் பொருளே பேருருவகுப்பான (நாமரூபவ்யாகரணமான) உலகமாய் விரிதலே "ப்ரபஞ்சம்" என்றும், பேருருநீங்கித்தன்னுள் ப்ரபஞ்சம் முற்றவும் ஒடுங்குதலே "ரப்ளயம்" என்றும், சொல்லப்படும். "ப்ரளயம்" என்றதற்கு

"நன்கொடுங்குதல்" என்றது பொருள். "லீங்" "ச்லேஷணே" என்றது பாணிநிதாது பாடம் "ப்ரபஞ்சம்" என்றதற்கு "நன்குவிரிதல்" என்றது பொருள். "பசி" "விஸ்தாரகரணே" என்றது பாணிநிதாது பாடம். ஒடுக்கம் சூக்குமநிலை (ப்ரளயம் ஸூக்ஷ்மநிலை). விரிவு தூலநிலை (ப்ரபஞ்சம் ஸ்தூலநிலை). இவ்விரண்டும் உண்மையான நிலைகளே. சூக்கும நிலையும், தூலநிலையும், சேதநாசேதநங்களை, சரீரமாகவுடைய பரனுக்குற்றது என்றது உபநிடதமதம். சேதநாசேதநங்கள் பரனுடைய தூல விசேடணங்களாக விரிதல் ப்ரபஞ்சம் என்னப்படும். அவைகள் பரனுடைய சூக்கும விசேடணங்களாக ஒடுங்குதல் ப்ரளயம் என்னப்படும். வேதமாகிய இலக்கியப்பொருள் ஈதேயாம் என்றதை பாணிநீயமாகிய இலக்கணம் நன்கே விளக்கிற்று. ஸ்தூல ஸூக்ஷ்மதசாபந்ந சேதநாசேதந விசிஷ்ட பரப்ரஹ்மம் ஒன்றே பரம்பொருள் என்ற மெய்ப்பொருள் பாணிநியிலக்கணம் காட்டியதாகையால் ஈதே மறைப்பொருள் என்று விளக்கும் இராமாநுசமுனி "பகவாந் பாணிநி:" என்று அன்னவரைப் போற்றியுகந்தார். "சொல்" என்னும் வேதமாகிய இலக்கியத்துக்குப் பாணிநீயமென்னும் வ்யாகரணமே இலக்கணமாய்த் திகழ்ந்தது. "இலக்கிய இலக்கணங்கள் வ்யாகரணமாம்" என்று காத்யாயந பகவர் வார்த்திகமருளினர். எழுத்து மறையாகும் (அக்ஷரஸமாம்நாயமாகும்) இலக்கணம் கொண்டே எம்பெருமானார், சொல் (சப்தம்) ஆகும் உபநிடத இலக்கியத்தை விளக்கியருளினர். "ஸூத்ராக்ஷராணி வ்யாக்யாஸ்யந்தே" (சூத்திர எழுத்துக்கள் விளக்கப்படப்போகின்றன) என்ற ஸ்ரீபாஷ்யப்ரதிஞ்ஞையின் நீர்மையை உற்றுழி விளக்கிக்கூறுவல். அந்நீர்மையை ஈண்டும் காண்க. சேதநர்கள், பகுதிவிசேடணமற்றுப்பேருருவகன்று, உணர்வில்லனவென்னலாம்படி, பகுதியை (ப்ரக்ருதியை) ஒக்கவே கிடந்தமை நோக்கிய கண்ணனே, அவ்வச் சேதநர்கள் பண்டைக்கன்மவன்மையின் காரியமாய் அவ்வவ்வருணமுறையாலே குணத்தாலும், தொழிலாலும், வரையறுக்கப்பட்டுள்ள, ஆக்கைகொண்டே ஆக்கி, அவ்வாற்றானே அவர்களைக்காரணங்கள் கொண்ட பிண்டப்பொருளாக்கி, அப்பொருளனைத்தும் தனது தூல விசேடணங்களாய் விரிதலே உலகாகும் என்றது சாரீரக சாஸ்த்ர ஸித்தாந்தம். ஸர்வ சரீரியின் தூலவிசேடணங்

களாக விரிந்து சூக்கும விசேடணங்களாக ஒடுங்கும் இயல்பை உடைத்தாயது உலகு என்றதை விளக்கும் மறைநூல் சாரீரக நூலாம். இவ்வாறு தனது சரீரமென உலகை ஒடுக்கி விரிக்கும் பெற்றியதே முதற்றனிவித்தாகிய பரப்பிரமம். "முதற்றனிவித்தேயோ" என்று ஆழ்வார் இத்திறஸர்வ சரீரியான ஆதிகாரணப்பொருளையே விளித்துத் தமது மறைமொழியை அம்மறைத் தலைப்பொருளுக்கே ஆக்கித்தலைக்கட்டினார். "முதல்" என்றதால் நிமித்த காரணம். 'தனி' என்றதால் ஸஹகாரி காரணம், 'வித்து' என்றதால் உபாதாந காரணம், என்று ஆழ்வார் சாரீரகம் ஓதும் காரண மும்மையும் பரனிடத்து ஒன்றி ஒருங்கிய நுட்பத்தை விளக்கியருளினர். ஒடுக்கம் கண்டு உபாதாந காரணம் கூறிற்று. உட்புகுதல், ஏவுதல் முதலியன கண்டு ஸஹகாரி காரணம் கூறிற்று. விரிவு கண்டு நிமித்தகாரணம் கூறிற்று. இம்முறையால் ப்ரளயம் விளக்குவது உபாதாந காரணத்தை என்றும், ப்ரபஞ்சம் விளக்குவது நிமித்த காரணத்தை என்றும், உபநிடதம் சாலவிளக்கிற்று. ப்ரளய நிர்வாஹகன் பரன் என்றதை உடன்பட்டார் பரனுடைய உபாதாநகாரணத்தன்மையை உடன்படும் கடமைப்பாடுடையரேயாவர் ப்ரபஞ்ச நிர்வாஹகன் பரன் என்றதை உடன்பட்டார் பரனுடைய நிமித்தகாரணத்தன்மையை உடன்படும் கடமைப்பாடுடையரேயாவர். இதை சாரீரகம் வல்லார்கள் பரம்பொருளின் "வேறுபடாத நிமித்த உபாதாந காரணத்தன்மை" (அபிந்நநிமித்தோபாதாந காரணத்வம்) என்பர்.

இனி, அவற்றுள்ளும், காரியம் என்னும் ப்ரபஞ்சம் நிகழ்வது பரன் கருத்தாலேயாதலானும், பரனது காரியமென்னும் படைப்புக்கு அவ்வச்சேதநர்களது கர்மசக்தியே அடியாதலனும், அச்சக்தியையே படைப்புக்கு முக்கியகாரணம் என்று உபநிடதம் பின்னும், விளக்கிற்று. படைப்பென்றது, காத்தற் பொருட்டே பல்கக் கருதிய பரம்பொருளே, அவ்வவ்வான்மாக்களைத்தத்தம் கர்மசக்தியடியாக, குணத்தானும் தொழிலானும் கூறுபடுத்தப்பட்ட ஆக்கையோடு ஒன்றச்செய்து விரிக்கப்பெற்றதேயாகும். அவ்வச்சேதநர்களது பண்டைக்கன்மவன்மையின் பயனையேபெற்றுப் போந்ததே அவ்வவர்களது ஆக்கையாகும். கன்மப்பன்மையே ஆக்கைப் பன்மைக்கு அடி, ஆக்கைப்பன்மையே தொழிற்பன்மைக்கு அடி.

இக்கன்மத்துக்கு இவ்வாக்கை, இவ்வாக்கைக்கு இத்தொழில்,
என்றே பிழையாது பாகுபடுத்திக்காக்கும் கருத்துடையனே
பரன் என்று பரனுக்கு உபநிடதம் இலக்கணம் வகுத்தபடி.
இவ்விலக்கணமே நாமரூப வ்யாகரணம். இதகையை கோப்பாய்
விரிந்துவிளங்குவதே ப்ரபஞ்சம். அஃதகன்று பரனிடத்து ஒடுங்
குதலே ப்ரளயம். ஈதே ப்ரபஞ்சம் (விரிவு), 'ப்ரளயம் (ஒடுக்கம்)
என்றவைகளின் பொருள் என்றதை இருடிகளும் மாக்கவிஞர்களும
விளக்கியுள்ளார்கள். இத்திறவித்தாரத்தை "விஸ்தார: ஸர்வபூதஸ்
யவிஷ்ணோ: ஸர்வமிதம் ஜகத்" என்று பராசரமாமுனிவரும், "ப்ர
ளயம் அகிலதாராலோகமஸ்ஹாய நீத்வா, ச்ரியமநுசயச்ரீ: ஸாநுரா
காம் ததாந:| ககநஸலிலராசிம் ராத்ரிகல்பாவஸாநே, மதுரிபுரிவபாஸ்
வாநேவஷந்வகோதிம்சதே" என்று மாகமாக்கவிஞரும் விரித்துள்ளார்
கள். சேதநங்களான ஆன்மாக்களும், அசேதநமாகிய பகுதியும் (ப்ர
க்ருதியும்) பரனுக்கே விசேடணங்களாகையாலும், சேதநர்கள் உய்
யுமாறு அவர்கள் கன்ம மடியாகப்பேருருவளிக்கும் கருத்துடை
யனுகி அவ்வாறுவிரித்துவிளங்குவதாலும் பரனே உபாதாந காரண
மாயும் நிமித்தகாரணமாயும் விளங்குகிறுன். ஈதேபரன் நிமித்தகார
ணமாய் நிற்கும் முறை. சேதநர்கள் கன்மவன்மையே படைப்புக்கு
முக்கிய காரணம் என்றதை நன்கு தெரிவிப்பது இம்முறையே
யாகும். சேதநர்கள் கன்மம் முக்கிய காரணமாகாக் கால், ப்ரளய
ப்ரபஞ்சங்கள் உருதொழியவும், ப்ரளயமே மோக்ஷமாகவும், நேரி
டும். சேதநர்கள் கன்மவன்மையும், பரன் கருத்தும், ஒன்றி உலக
மாய் விரிந்துள்ளது, ப்ரளயம்மோக்ஷமாகாமைக்குச் சேதநர்கள் கர்ம
சக்தியே தடையாய் நின்றது. அக்கர்மசக்தி முற்றவும் நீங்கியே
அவ்வவ்வான்மாக்கள் வீடு பெறக்கடவர். அப்பேறு பெறப்
பெருமுயற்சி செய்யுமாறே சேதநர்கட்குப்பரன் ஆக்கையளித்
துள்ளான். அவனிட்டுப்போந்த ஆக்கை கொண்டே அவனதே
யாகும் இன்னுயிரை அவன்தானே ஓதுவித்து விரித்தருளிய மறை
யற்நெறியூன்றி, அவன் பொன்னடிக்கண்ணே இட்டுய்யும் கடன
பட்டே சேதநர்கள் பிறந்துள்ளார்கள். ஈதே பிறவிப்பேறு. இப்
பேறு பெறுத்து மதே பிறப்பொழுக்கம். அதற்காகவே அறநெறி
வகுக்கப்பட்டுள்ளது. அவ்வறம் நடாத்தற்கு ஆக்கை இன்றியமை
யாததாயிற்று. இவ்வாறு, படைப்புக்கும் பிறப்புக்கும் சேதநர்கள்

கன்மமே முக்கிய காரணம் என்றும், பரன் நிமித்த காரணம் என்றும், விளக்கப்பட்டது. சேதநர்கள் கன்மவன்மையே படைப்புக்கு முக்கிய காரணமாகையால், "அருளின்மை" "வேண்டுதல்வேண்டாமையுடைமை" என்னும் குற்றங்கள் பரனை அணுகாவாயின. அவ்வவர்கள் கன்மமடியாக விசித்ர ஸ்ருஷ்டியைச் செய்யும் பரன் நிமித்த காரணம் என்று நன்கு தேறப்படவேண்டியது. "பஹுஸ்யாம்" "ப்ரஜாயேய" என்று பரன் கருதிய படைப்பாகும் பன்மைக்கு சேதநர்கள் கர்மசக்தியே முக்கிய காரணம், பரன்கருத்து நிமித்த காரணம். அக்கருத்து, காக்கும் இயல்வினனான பரனது கருத்தாதலால் படைக்கப்பெற்ற உலகு, படைத்தவன் வகுத்தநெறியூன்றிக் காப்புறவே பல்கிவிரிக்கப் பெற்றதென்றது பெறப்படும்.

ஆக, காக்கும் கடவுளே நிமித்த காரணமாக நின்று, ப்ரளயத்தில் தன்னிடத்தே ஒடுங்கி ஒருங்கிய தன்னுடைமையான சேதநர்களை ஆட்படுத்தவே, படர்ந்து பலவாய நாமரூபமயங்களாக விரித்து கருமம் துணிந்தொழுக வல்லார்களாக்கியும், அவ்வலிமை நோக்கியே அறநெறி வகுத்தும், உள்ளபடியால், அந்நெறியே அவனது அருணெறியுமாயிற்று. சேதநத்தன்மைக்கு வேத சாஸ்த்ரம் வகுத்தவாறு ஒழுகும் கடைமையையே, வ்யாஸ பகவான் இலக்கணமாக்கி, அவ்விலக்கணம் ஒன்றே சேதநர்களைப் பகுதியினின்றும் பாகுபடுத்திக்காட்டும் இலக்கணம் என்று உபநிடத நுட்பத்தை விளக்கிக் காட்டியுள்ளார். இம்முறையால் அருளும் அறனும் ஒன்றி நின்றமை தெளிவிக்கப்பட்டது. பரன் அருள் சுரந்து வரையறுத்துப் பல்கியதே அறமாகும். வேதம் ஒன்றே இவ்வறம் விளக்கவல்லது. வேதத்தின் கண்ணே பரன்சேதநர்களைக் கையடைத்துள்ளான். வேதம் ஒன்றே சேதநர்களைக்காக்கப் பரன் கொடுக்கும் கையாயிற்று. வேதம் ஒன்றே பரனது கையென்றும், மற்றவைகையல்லனவென்றும், மறைமுனிவரனைவரும் ஒருமுகமாய் முறையிடாநிற்பர். இவ்வறிவொன்றே "ஞாநம்" என்றும், ஏனைய அறிவனைத்தும் "அஞ்ஞாநம்" என்றும் அன்னவர் அறுதியிடாநிற்பர். சேதநர்களை அசேதநத்தினின்றும் பாகுபடுத்துவது சாஸ்த்ர அறிவும் ஒழுக்கமுமே யாதலால் அவ்வாறு கூறப்பட்டது "காருண்யாத் சாஸ்த்ரபாணிநா"; "சாகாபேதைஸ்ஸ்வபகம் அநகம் சாச்வதம் சாஸ்த்ரபாணிம்" என்றும் நன்கு விரிக்கப்பட்ட இப்பொருளை

யே "பேதைமையு ளெல்லாம் பேதைமை காதன்மை கையல்ல தன்கட் செயல்" என்று திருவள்ளுவனார் யாப்புறுத்தியுள்ளார். "நூலோர் கடிந்த செயல்" என்ற அழகாரது உரையின் அழகு உய்த்தறியற்பாலது. வேதமே பரனது கையாகும். அக்கை கடிந்த செயலே கையல்ல செயலாகும். அன்னேயாய் அத்தனாய் ஓதப்பட்டார் தம்மிலும், பல்லாயிரமடங்கு அருண்மை மிக்கது அன்னவனது வேதசாஸ்த்ரம் என்றும், அந்த சாஸ்த்ரம் ஒன்றே அவன் செலுத்தும் கோல், என்றும், நம்மிராமாநுசமுனி அருளிச்செய்வர். ஆளும் கடவுளே அருளும் பரன். அருளும் பரன் ஆளக்கருதிப்பலகி விரித்ததே படைப்பாதலின், அருண்மையே ஆண்மையாய் விரியா நின்றது. அருண்மையே அவனது குணமும் இயல்புமாம். அருண்மை விரிந்து நிறம் பெறுதலே ஆண்மையாகும். அருள் இயல்பாயும் குணமாயும், வீரியம் அதன் நிறமாயும் திறமாயும் விளங்காநின்றன. வீரியம் பொலிந்ததே தருமமாதலின், அருள் சுரக்கும் மெய்ம்மையைக் காப்பது தருமம் என்று ஓதப்பட்டது. இருணக்கோனடாத்தும் பரனே தரும உருவென்றும், அவனது குணமே அருள் என்றும், பரதத்துவம் விரிக்கப்பட்டது. குணவீரியங்கள், ஸத்ய தர்மங்கள், அருண்மை ஆண்மைகள், ஒருங்க விளங்குபவனே புருடோத்தமன். அன்னவன் கோலாகிய வேததருமத்தை மறுத்தார், அவனது ஆண்மையை மறுத்தாராவார், என்ற ஸ்ரீபாஷ்யத்துமொழியின் ஆழ்கருத்தை இங்ஙனே தெளிக. இவ்வாறு, பரனது வீரியமே படைப்பாய் விரிந்தது. அவ்வீரியம் விளக்குவதே வருணம். "குணவாங்கச்ச வீர்யவாங்" என்று வான்மீகியும், "வாஸுதேவஸ்யவீர்யேண வித்ருதாநி மஹாத்மந:" என்றுவ்யாஸரும், பரனே வீரியம் பரந்த தருமஉரு என்றதை அருளிச்செய்துள்ளார்கள். காக்கும் இயல்வினனது வீரியஉருவே உலகம். உலகைக் காப்பது வீரியமாகிய அவனது தருமம். வீரியமே தாங்கும். தாங்குமதே தருமம். வரையறுத்துக் காக்குமதாகையால் தருமமே "ஸேது" (அணை) என்று கூறப்பட்டது. "வித்ருதாநி மஹாத்மந:" என்று, தர்மசப்தத்தாலும், வரையறுத்துக் காக்கும் அணையெனும் பொருளமைந்தோர் "ஸேது" சப்தத்தாலும், வ்யாஸபகவான், பாரதத்திலும், சூத்திரத்திலும், பரனது தருமநுட்பத்தை விளக்கிக் காட்டினார். இதன் விரிவை ஸ்ரீபாஷ்யம் நன்கு

நோக்கிக் கொண்க.

ஆக, பரனது வீரியத்தே சொல்லும், பொருளும் விரித்து படைப்பாக ஆக்கிக்காக்கப்பட்டுவருகின்றன. பரனதுகாரணத்தன்மை கொண்டே இவ்வுண்மை தெளியப்படவேண்டும். அக்காரணத்தன்மை விளக்குவதே நாமரூபவ்யாகரணம். சொல்லுக்கு இலக்கணம்வ்யாகரணம். பொருளுக்கு இலக்கணம்வருணம். இம்முறையொன்றிலேயே சொல்லனைத்தும் பரம்பொருளின் சுட்டாய் நின்றன. பொருளனைத்தும் பரம்பொருளின் உடைமையாய் நின்றன ஆக்கைமன்னிய ஆன்மாவுக்கு அந்தர்யாமியாகிய பரம்பொருளையே சொல்லனைத்தும் சுட்டாநின்றன. ஈதே சொல்லிலக்கணம். ஈதேசொல்லின்வன்மை. ஈதேசொல் பொருளை உணர்த்தும் முறை. ஈதேவ்யாகரணமுறை. இம்முறையைப்பின்னர் விரிப்பாம். அசித் விசிஷ்ட ஜீவசரீரகபரமாத்மாவையே சொல்லனைத்தும் உணர்த்துகின்றன. விசிஷ்டப்பொருளையே சொல் உணர்த்தும் வன்மையுடைத்து என்றார் எம்பெருமானார். ஈதேசொல்வ்யாகரணத்தோடு ஒருப்பட்டுப் பொருளை உணர்த்தும் தருமம். அவ்வாறு வ்யாகரணத்தோடு ஒருப்படாக்கால சொல் அவப் பிரஞ்சநம் (அபப்ரம்சநம்) ஆகும். இலக்கணவழுப்பட்ட சொல்லே அவபிரஞ்சநம். அவ்வாறே பொருளுக்கு இலக்கணம் வருணம். அசித்விசிஷ்ட ஜீவசரீரகபரமாத்மாவையே சொல்உணர்த்துதலால், ஆக்கை கொண்டு வருணமும், சேதநத்வம்கொண்டு சரணமும், சரீரித்வம்கொண்டு வரணமும், விளக்கப்படாநின்றன. இவை ஒருப்படும் நேர்மையே பொருளுக்கு இலக்கணமாயிற்று. அவ்விலக்கணத்தால் ஸர்வசரீயான பரன் தானே விளங்குகிறபடியால், அவ்விலக்கணத்தே சேதநர்கள் ஒருப்பட்டுப் பொருளாகும் கடப்பாடுடையராயினர். இல்லையேல் சேதநர்கள்ப்ரஷ்டராவர். நெறிப்படாதசொல்லே அவப்பிரஞ்சநம். நெறிப்படாத சேதநரேப்ரஷ்டர். சொல்லை வழுப்படாதுகாப்பது வ்யாகரணம்போல், சேதநரை வழுப்படாது காப்பது வருணம். ஈதேநாமரூபவ்யாகரண நுட்பம், இந்நுட்பமாய்ந்தே வருணநெறி தேறப்படவேண்டும். பரனது நிமித்த காரணத்தன்மை தோற்றுவிப்பதேவருண நெறி. இந்நெறியே படைப்பின் முறை. இம்முறையோர்ந்து ஒழுகுதலே பிறப்பொழுக்கம். ஈதே ஜாதி தர்மமென்னப்படும். இத்தருமம் யாக்கைநோக்கியே வகுக்

கப்பட்டதாதலின், சாந்துணையும் காக்கப்பட வேண்டியதாயிற்று. ஆக்கை பெறுதலே பிறப்பு. ஆக்கை துறத்தலே இறப்பு. ஆக்கை தனக்குத்தானே இட்டுக்கொள்ளவொண்ணுமை நோக்கியும், ஆக்கை மாறுபடவொண்ணுமை யோர்ந்தும, அவ்வவ்வாக்கைக்கு வகுத்துள்ள தருமம் மாறுபட வொண்ணுமை தெளியற்பாலது சார்ந்துணையும் பிறப்புத் தொடர்ந்துள்ளதால், பிறப்பொழுக்கம சாமளவும் விடவொண்ணுததாயிற்று. பகுதிவிசேடணமாயும், ஆன்மாவிசேடியமாயும் ஒன்றித்தோன்றுதலே பிறப்பு. விசேடணமாகிய பகுதி விடாக்கால், அப்பகுதிக்கேற்ற கருமம் விடாது தொடர்ந்தே நிற்கும். பகுதி நின்றது, அதன்கருமம் அகன்றது, என்றது, வைதிகமதத்துககு முரண்பட்டதேயாம். இத்தரும நுட்பத்தைத எம்பெருமானுர் தாமே பலபுடைகளில் வலியுறுத்தியுள்ளார். விசிஷ்ட உண்மையை உடன் பட்டார்க்கே வருணநெறி நன்கு இயையும் என்று அபசூத்ராதிகரணத்திலும், சிற்சில கிரிசைகளால் வருணமும் ஆச்சிரமும் மாறும் என்ற கோட்பாடு வேதத்துக்கு முற்றிலும் முரண்பட்டதென்று பசுபத்யதிகரணத்திலும், இத்திறப்படைப்பின் நெறியைவகுத்து விதிக்கும்வேதம் என்னும் பரனுடைய ஏவலை மீறிக்கடந்தாரை அவன் முனியாதுவிடில் பேடியேயாவன் என்று ரசநாநுபபத்ய திகரணத்திலும், ஸம்ஸ்தாநரூப ஜாதி நுட்பத்தை ஜிஞ்ஞாஸாதிகரணத்திலும் நன்குவிளக்கி வைதிகமாகிய வருண தருமம் தமதுதரிசனத்தே சாலப்பொருந்திநின்றதென்று அறுதியிட்டுள்ளார்.

சரீராத்ம ஸம்பந்த ஸத்யத்தையும், அபிந்நநிமித்தோபாதாந காரணத் தன்மையையும், சாலச்சிறப்பிக்கும் எம்பெருமானுர் தரிசனத்தின் கண் வருணமும் சரணமும் நன்கு ஒருங்கி இன்றியமையாவாயின என்பதை ஓர்ந்து தெளியவேண்டும். சேதநா சேதநங்களை ஒன்றச் செய்து விரித்தலே ஸ்ருஷ்டி. ஈதேபடைப்பு. இப்படைப்பு முன்னர் சரீரஸ்ருஷ்டியாயும், பின்னர், அம்முறையால் படைப்புப் பல்காமை நோக்கி, யோநிஸ்ருஷ்டியாயும், ப்ரபஞ்சத் தொடர்புநிலை பெற்று வருதலால், ஆக்கையைப் பற்றியவருண நெறியூன்றி ஆன்மா பரனைச்சரணப்புக்கு அவன் பொன்னடிக்கண் மீளாது நண்ணித் திகழும் பேறு பெறக்கடவனுயினன். சரீரஸ்ருஷ்டியும், யோநிஸ்ருஷ்டியும், பிறப்பொழுக்கத்தின் தூய்மையையே வலியுறுத்தாநின்

றன. நிமித்த காரணனான பரன் பண்டே பணித்துப் போந்ததே இத்திற இருவகைப் படைப்பும், பிறப்பொழுக்கமும், என்றதே இருடிகளும் ஆழ்வார்களும், எம்பெருமானாரும் விளக்கியருளிய முறை.'' திசைமுகன் கருவுள் வீற்றிருந்து படைத்திட்ட கருமங்களும்'' என்றும், ''நீயோனி களைப்படையென்று நிறை நான்முகனைப் படைத்தவன்'' என்றும், ஆழ்வார் தாமே இவ்விருமுறையையும் விரித்தருளினர். இத்தகைய படைப்பென்னும் வித்தாரத்துக்கு பரனது நிமித்த காரணமும்' சேதநர்கள் கன்மவன்மையும், கண்டு, பிறப்பொழுச்கம் குன்றாது காக்கப்பட வேண்டியதாயிற்று. இப்பொருளனைத்தையும் சாதுர்வர்ண்யம் மயாஸ்ருஷ்டம் குணகர் மவிபாகச:'' என்று பரன்தானே கூறி ''குணகர் மங்கள்'' என்றதற்கு கர்மாணிப்ரவிபக் தாநிஸ்வபாவப்ரபவைர் குணை: சமோதமஸ்தபச் சௌசம்'' என்று கீதையில் சாலவிரித்து விளக்கியுள்ளான்.'' ஸ்வகர் மணுசமப்யர்ச்யஸித்திம் விந்ததி மாநவ :'' மத்ப்ரஸாதாதவாப்நோதி சாச்வதம் பதமவ்யயம்'' என்றே அறுதியிட்டருளினன். தம் கருத்துச் சிறிதும் கலசாது, பரன் கருத்து நோக்கியே ஒழுகும் நல்லார் நெறியே வருணநெறி. ஸர்வசரீரி நடாத்துவிக்கும் நெறி ஈதாதலின் சேதநர்கள் இந்நெறிக்கண் உற்றே ஒழுகும் கடமைப்பாடுடையராயினர். ஈதேவைணவ நெறி. இவ்வாற்றால் இந்நெறி கடக்கக்கடவ தொன்றன்று என்றது தேறிற்று.

நிமித்தன் கருத்தா நிறத்தே நிகழ்த்தும்
சமத்தாற் கருத்தாக்கள் சேர்க்கும் காத்தால்
நமத்தே யென்த்தம் மனத்தே நிறுத்திச்
சமைத் தோரறச் செம்மை சேமித்து வந்தோம். (1)

ஆவலோடாக்கை மாட்டே ஆவியேயூட்டி யாட்டும்
காவலாயிலகு கண்ணன் கருத்தென் நடாத்து கோலாம்
ஏவலேயோர்ந்து நாளும் தேவனாராணை காணப்
பாவலர் பெருமானுள்ளம் பூத்தெழும்புகழேசொன்னோம். (2)

பத்திராசிரியர்.

# குருபரம்பரை.

குருபரம்பரையைத்தொழுது பகவானைத் தொழுதல் ஆன்ரோர் உகந்த முறை. பகவானே ஆதிகுரு. அவனே அடையப்படும் குரு. அவனை ஆதிகுருவென்றுதெளிந்து அடைதலே மனிதர் பெறும் பிறவிப்பேறு. நமது குருக்களும், அவர்கள் குருக்களும், ஆதிகுருவாகிய பரனை அடைவிக்கும் குருக்களாவார். குருக்கள் காட்டித்தந்தபடி பகவான் அடையப்படுவான். தங்கள் தங்கள் குருக்கள் தொடக்கமாய் பகவானளவாக குருபரம்பரை தொழப்படவேண்டியது. இது, குருபரம்பரானுஸந்தானம் என்னப்படும். இந்த அநுஸந்தானம், ஆரோஹணம், அவரோஹணம், என்ற இரண்டு முறைகளாலும், செய்யப்படும். நமது ஆசார்யனை தொடங்கி, பகவான் வரை அநுசந்திப்பது ஆரோஹணக்ரமம். பகவான் தொடங்கி நமது ஆசார்யன்வரை அநுசந்திப்பது அவரோஹணக்ரமம். ஆரோஹணக்ரமம் என்றது ஏறும்முறை. அவரோஹணக்ரமம் என்றது இறங்கும் முறை. ஆசார்யர்கள் வடிவாய் பரன் இறங்கி ஆட்கொள்ளும் முறையை விளக்குவது அவரோஹணக்ரமம். ஆசார்யர்கள் அருளால பரனை அடையும் முறையை விளக்குவது அவரோஹணக்ரமம். இந்த இரண்டு முறையாலும் அநுஸந்தானம் செய்யவேண்டும். நல்ல புத்தி ஏற்பட்டு மனது பரிசுத்தமாய், இடையூறுகள் எல்லாம் அறவே அற்று, இம்மையில் சுகமும், மறுமையில் பேரின்பமும், பெறவே, இப்படி பகவானை அநுஸந்திக்க வேண்டும். 'குரு' என்ற சொல்லுக்கு வேதப்பொருளைப்போதித்து அஞ்ஞான இருளை நீக்குபவர் என்றது பொருள். குருக்கள் தொடர்பு, குருபரம்பரை என்று சொல்லப்படும். அவரோஹணக்ரமத்தையிட்டு குருபரம்பரையைச் சுருக்கமாய் விளக்குவோம்.

பகவான் ஆதிகுரு. குருக்களுக்கெல்லாம் பகவானே முதல் குரு. பகவானே ஆதிகுரு என்றது வேதம். பகவானுக்கு அனேகம் திருநாமங்கள் உள்ளன. ஸ்ரீய: பதி, கேசவன், நாராயணன், மாதவன், கோவிந்தன், விஷ்ணு, மதுசூதனன், திரிவிக்கிரமன், வாமனன், ஸ்ரீதரன், இருடீகேசன், பத்மநாபன், தாமோதரன், வைகுந்தன்,

அச்சுதன், அநந்தன், வாஸுதேவன், புருஷோத்தமன், சௌரி பெருமாள், முதலியன. அவனே பரப்ரஹ்மம். அவனுடைய அவதாரங்கள் அநேகங்கள். அவைகளுக்குள் முக்கியமான அவதாரங்கள்:—மத்ஸ்ய, கூர்ம, வராஹ, நரஸிம்ஹ, வாமந, பரசுராம, கோதண்டராம, பலராம, க்ருஷ்ண, கல்கி, ஹம்ஸ, ஹயக்ரீவாதிகள். ஸாதுக்களைக் காப்பாற்றவும், பாபிகளை ஸம்ஹரிக்கவும், வர்ணாச்ரம தர்மங்களை நிலை நிறுத்தவும், பகவான் அவதரிக்கிறான். இப்படி அவதரித்து ரக்ஷிக்கும்பகவானே முதல் ஆசார்யன். சாஸ்த்ரப் பொருளைச்சேமித்து, தர்மாசாரத்தில் உலகத்தை நிலை நிறுத்தி ஒழுகச்செய்து, தானும் தர்மாசாரனாக ஒழுகி, விளங்குபவனே ஆசார்யன் ஆவான். உலகத்தைப் படைத்து, வேதத்தை ஓதுவித்து, நல்லொழுக்கத்தை விளக்கி, நல்லறிவைத்தந்து, சரணம் புகுவித்துப், பிறந்தாரை உயரச்செய்து, பகவான் ஆட்கொள்கிறான். மற்ற ஆசார்யர்களைத் தனக்குக்கருவிகளாய்க் கொண்டு, அவர்கள் உள்ளத்திலும், நாவிலும் கோயில் கொண்டு, நல்ல உபதேசம் செய்து நல்ல வழியில் ஒழுகச்செய்து, உலகத்தை உய்விக்கிறான். ஆகையால் பரன் முதற்குருவாயும், குருக்களுக்கெல்லாம் குருவாயும் விளங்குகிறான்.

குருபரம்பரையில் இரண்டாவதாக ஓதப்பட்டுள்ளவள் லக்ஷ்மீ. இவளும் பெருமாளைப்போலே முதல் குருவாம். ஆகையால் இவள் பெரிய பிராட்டி என்னப்படுவாள். வேதம் பரனை ச்ரிய: பதி என்றதுபோல், லக்ஷ்மியை விஷ்ணுபத்நீ என்றது. திருமாலும், திருமகளும், சேர்ந்தே விளங்கும் திவ்யதம்பதிகள். பிரித்து நிலையில்லை, பெருமாளைச்சொன்ன இடமெல்லாம் பெரிய பிராட்டியாரையும் சொல்லிற்று. பெருமாள்பதி. பெரியபிராட்டியார் அவன் பத்நீ பெருமாளும் பெரியபிராட்டியாரும் தம்பதிகளாயே அருளும் தகவுடையோர்கள். பெருமாள் உலகுக்கெல்லாம் பிதா. பெரிய பிராட்டியார் உலகுக்செல்லாம் மாதா. உலகனைத்தும் இவ்விருவர்களின் மக்கள். மக்களாகிய உலகத்துக்கு, அன்னையும் பிதாவுமாகிய, லக்ஷ்மியும், நாராயணனும், ஒக்கவே வழிபடவேண்டியவர்கள், இருவர்களும் தம்பதிகளாகையாலும், உலகத்துக்கு அன்னையும் பிதாவுமாகையாலும், அவ்விருவர்களும், அவ்வாறு வழிபடப்படவேண்டியவர்கள். இவ்விருவர்களின் சேர்த்தியே உலகத்துக்குத்

தஞ்சம்: இம்மிதுநமே அருள் சுரக்கும். இம்மிதுநமே காப்பளிக்கும். பெருமாளுடைய அவதாரங்கள் போலே பெரியபிராட்டியார் அவதாரங்களும் அனேகங்கள். பெருமாள் அவதரிக்குந்தோறும் பெரிய பிராட்டியாரும் அவதரிக்கிருள். இவள் திருநாமங்களும் அனேகங்கள். ஸ்ரீ:, லக்ஷ்மீ: பத்மா, ஜலதிதநயா, விஷ்ணுபத்நீ, பத்மாலயா, கமலா, ஹரிப்ரியா, இந்திரா, திரு, செய்யாள், தாமரையாள் பங்கயத்தாள், திருமகளார், முதலியன. இவளது முக்கியமான அவதாரங்கள், ஸீதாவதாரம், ருக்மிணியவதாரம், முதலியன.

இந்த திவ்ய தம்பதிகளுக்கு திருக்கலியாணம் செய்து வைத்து மகிழ்ந்த மஹரிஷிகள் வால்மீகி, பராசரர், வ்யாஸர், என்பவர்கள். ஆசார்யர்களைத் தொழும் பாட்டுக்கள் ஸம்ப்ரதாயத்தில் 'தனியன்கள்' என்று சொல்லப்படும். இந்ததிவ்ய தம்பதிகளின் தனியனும், அதன் பொருளும் வருமாறு:—

## பெருமாள் தனியன்.

கமப்யாத்யம் குரும் வந்தே கமலாக்ருஹமேதி நம் |
ப்ரவக்தா சந்தஸாம் வக்தா பஞ்சராத்ரஸ்யய: ஸ்வயம் ||
யாரொருவன் தானே வேதங்களுக்கு முதலில் உபதேசகனாகவும் பஞ்சராத்ரம் என்னும் ஆகமசாஸ்த்ரத்துக்கு உபதேசகனாகவும், விளங்குகிறானோ, தாமரையாள் கேள்வனான எண்ணுதற்கு அரிய அந்த ஆதிகுருவை (பெருமாளை) வணங்குகிறேன். (எ-று)

## பெரிய பிராட்டியார் தனியன்.

ஸஹதர்மசரீம் சௌரே: ஸம்மந்த்ரித ஜகத்திதாம் |
அநுக்ரஹமயீம் வந்தே நித்யம் அஞ்ஞாத நிக்ரஹாம் ||
பெருமாளுடைய தருமத்துணைவியாயும், உலகத்தின் க்ஷேமத்தை நன்கேகருதுபவளாயும், அருளின் வடிவாயே விளங்குபவளாயும், என்றுமே நிக்ரஹத்தை (கடிதலை) அறியாதவளாயும், விளக்கும், (பெரிய பிராட்டியாரை) வணங்குகிறேன். (எ-று)

(தொடரும்)

பத்திராசிரியர்.

# திருவாய்மொழி அநுபவம்.

(முன்தொடர்ச்சி.)

திருவடி தொழுகையிலும் மிக்க இன்பமில்லையென்பதை நான்காமடி ஸூசிக்கிறது. முக்தர்கள் "ஹாவுஹாவுஹா" என்று ஸாமகானம் செய்வர்; நாரத முனியைப்போல்ஆநந்தமாய் ப்ரஹ்மத்தைப்பற்றிப் பாடிக்கொண்டு ஸர்வலோகங்களிலும் திரிவர். வழிபட்டோடவருள்பெற்று மாயன் கோலமலரடிக்கீழ்ச் சுழிபட்டோடும் சுடர்ஜோதி வெள்ளத்தின்புற்றிருந்தாலு மிழிபட்டோடவினிற்பிறந்துதன்சீரியான் கற்று மொழிபட்டோடுங்கவியமுதநுகர்ச்சியுறுமோமுழுதுமே என்றபடி திருவாய்மொழி பாடித்தாமு மாநந்தித்து, அடியார்களை ஆநந்தப்படுத்தி இந்தப்பாட்டுக்களால் அடியார்களுக்கு சாச்வதகாலமும் இன்பமளிப்பதன் மூலமாய் அவர்களுக்கு சேஷத்வத்தை வஹிக்கமனோரதம்—திருவாய்மொழி பாடுவதும் அடியார்க்கு இன்பமளிக்க தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேனென்றபடி. 'கெடுமாற்கடிமை' நடுவில் இப்பாசுரம் அமைந்தது. அயர்வறுமமரர்கள் விபந்யவ: ஸமிந்ததே என்றபடி வானவர் நாட்டில் பாடிக்களிப்பதிலும், நித்யவிபூதி இன்பத்திலும், திருவாய்மொழி பாடித்தொழுவதே அதிகவின்பமென்றறுதியிட்டார், "அந்த ஸம்ஸார நிவ்ருத்திபூர்வக பகவதநுபவப்ரீதிதான் இங்கே திருவாய் மொழியைக் கொண்டு எம்பெருமானை அனுபவித்தால் வரும்ப்ரீதிக்குப்போருமோ என்கிறுர்" என்று பிள்ளான் திருவாய் மொழி பாடும்விஷயமாகவே அப்பாசுரத்தையோஜனை செய்தார். பொய்கேழ் புகழ்கள் வாயவாய்ப் புலன் கொள்வடி வென்மனத்ததாயங்கே மலர்கள் கையவாய் வழிபட்டோட வருளியேஎன்று முன் பாசுரத்திலும் திருவாய் மொழி பாடும்படி "மயர்வறமதி நலமருளியதை" ஸாதித்தார். ஆநந்தமயனேடுதொடங்கிய முதற்பாசுரத்தில் முடிவில் 'என்மனனே' என்று மநோமயத்தை' நினைக்கிறுர். 'அந்தக்கரணவ்ருத்தி ப்ரசுரமான மநோமயத்திற்கு (மனதிற்கு) தலை,யஜுர்வேதம். வலதுபக்கம்ருக் வேதம்; இடதுபக்கம், ஸாமவேதம்; நடுவு, ஆதேசம், (வேதவிதிக் கட்டளை); ஆதாரம், அதர்வாங்கிரஸமந்தரங்கள், என்று உபநிஷத்துசொல்லிவிட்டு, 'வேதம் நிறைந்த மனது' விஷயமாகவும் யதோ

வாசோ நிவர்த்தந்தே என்கிற ப்ரஹ்மாநந்த விஷயமானச்லோகத்தைபடித்தது. சொல்லுக்கும் மனதிற்கும் எட்டக்கூடாத அந்தமில்பேரின்பம், விசுத்தமானமனதின் ஸஹாயத்தால் தானே அடையக்கூடுமென்று வேதமயமான விசுத்தமனதின் விஷயத்திலும் ஆநந்தமயவிஷயமான அந்தமில்பேரின்ப ச்லோகத்தைச்ருதி படிற்று. இப்பாசுரம்தொடக்கத்தில் 'யதோவாசோ நிவர்த்தந்தே' என்ற ஆநந்தமய விஷயமான எல்லையற்ற ஆநந்தச்லோகத்தைக்காட்டி பாசுரமுடிவிலும் 'என்மனனே' என்று மநோமயவிஷயமான அதே ச்லோகத்தைக்காட்டுகிறது. 'மயர்வறமதிநலம் அருளியது' அயர்வறுமமரர்கள்' அநுபவத்திற்குக்குறையாதென்றும், வேதமயமான மனத்திற்கும் சொல்லிலடங்காதவாநந்தம் விளைக்குமென்றும் 3, 4, அடிகளாற் காட்டுகிறார். தமிழ்மறையான ஸாமவேதம் பாடப்போகும் தம்மனது நான்மறைகளால் நிரம்பியதை ஸூசிக்கிறார். 'என்மனனே' என்று வானவர் நாட்டினதி திவ்ய தேசங்களில் கோவில்கொண்டு தம்நெஞ்சிலும் கோவில்கொண்டதையநுபவித்துதம் நெஞ்சில் வானவர் நாட்டோடு, திவ்ய தேசங்களோடு புகுந்ததைப்பேசி அவருக்குத்திருவாய்மொழி பாடும் கைங்கர்யத்தை மனதிற்கு அநுசாஸனம் செய்கிறார் (மாயப்பிரானென்வல்வினை மாய்ந்தற நேசத்தினனெஞ்சுகுடி கொண்டான் தேசத்தமரர் திருக்கடித்தானத்தை வாசப் பொழின் மன்னு கோயில் கொண்டானே" "கோயில் கொண்டானதனோடு மென்னெஞ்சகங் கோயில்கொள் தெய்வமெல்லாந் தொழவைகுந்தங் கோயில் கொண்டகுடக் கூத்தவம்மான்' என்று பாடுவதைக் கவனிக்க. (தொடரும்.)

ஏ. வி. கோபாலாசாரியார்.

ஸ்ரீ:

# திருவல்லிக்கேணித்தமிழ்ச் சங்கம்.

**சங்க வித்வான்கள்.**

1. ஸ்ரீ உபவே தில்லையம்பூர் வெங்கடாசார்ய ஸ்வாமி.
2. ஸேது ஸமஸ்தான வித்வான் ஸ்ரீ உபவே ஆர். ராகவய்யங்கார் ஸ்வாமி.
3. ஸ்ரீ உபவே மு. ராகவய்யங்கார் ஸ்வாமி.
4. ஸ்ரீ உபவே. ஸ்ரீரங்கம் சடகோபாச்சாரிய ஸ்வாமி (மாம்பலம்).

**தலைவர்** ... ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்காரவர்கள்.

**உப தலைவர்கள்....**

1. ஸ்ரீமான வி. நரஸிம்மாசாரியாரவர்கள்.
2. ,, ஆர். சந்தானகிருஷ்ணய்யங்காரவர்கள்.
3. ,, யஸ். லக்ஷ்மி நரஸிம்மாசாரியாரவர்கள்.

**காரியதரிசியும், பொக்கிஷதாரரும்.** ஸ்ரீமான் ப. ரெ. திருமலை ஐயங்கார்.

**கமிட்டி மெம்பர்கள்.**

1. ஸ்ரீமான் ராவ் சாஹிப் ஆர். இராமசாமி ஐயங்காரவர்கள்.
2. ,, யஸ். கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள்.
3. ,, டி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்காரவர்கள்.
4. ,, ஏ. வெங்கடாசாரியாரவர்கள்.
5. ,, வி. ஷண்முகசுந்தர முதலியாரவர்கள்.
6. ,, யஸ். குமாரசாமி செட்டியாரவர்கள்.
7. ,, இ. கே. சபாபதி முதலியாரவர்கள்

**காரியாலயம்** ... 42-ஏ. வெங்கடாரங்கம் பிள்ளை தெரு திருவல்லிக்கேணி.

**முக்கிய நோக்கங்கள்.**

1. தமிழைப் பரவச் செய்தல்.
2. வாரந்தோறும் திருக்குறள் கம்பராமாயணம் முதலிய தமிழ் வகுப்புகள் இலவசமாக நடத்தல்.
3. தமிழ்ப் பெரியார் ஜன்ம தினங்களை கொண்டாடல்.
4. தமிழ் வித்வான் பரீக்ஷைக்குப் போகுமவர்களுக்கு வேண்டிய ஒத்தாசை செய்தல்.
5. சங்கவெளியீடாக ஒருபத்திரிகை நடத்தல்.
6. பிராசீனசம்பிரதாய முறைகளைக் காப்பாற்றத்தக்க ஏற்பாடு செய்தல்.
7. புலவர்களைப் போற்றுதல்.
8. திருநாட்களை நன்கு கொண்டாடல்.

ப. ரெ. திருமலை ஐயங்கார்,
காரியதரிசி

Printed at the Lakshmi Kantha Press, 405, High Road, Triplicane and Published by P. R. Tirumalai Ayyangar at 42-a, Venkatrangam Pillai St., Triplicane, Mad